**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண். 413/2018**

2025–ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 19–ம் நாள் புதன்கிழமை சாட்சியின் வாக்குமூலம், 2023–ஆம் ஆண்டு பாரதிய சாஷ்சிய அதிநியம் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு. மா. சந்திரமோகன், பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 19.11.2025 | | |
| பெயர்: | பாமா<br>(DW– 1 Cross con. ) | தகப்பனார் பெயர்: | வைரக்கன்னு |
| கிராமம்: | வாணகிரி | தாலுக்கா: | சீர்காழி |
| தொழில்: | வீட்டுக்குடித்தனம் | வயது : | 66/2025 |

**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி : 19.11.2025</u>**

**(ஆரம்பித்த நேரம்– 12.43)**

தாவா வழக்கு சொத்தை நான் எனது மகனுக்கு பொது அதிகார பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளனே். 1–ம் பிரதிவாதி எனது கணவரின் தம்பி ஆவார். தாவா சொத்தை கடந்த 1967–ல் வாதியின் தகப்பனார் பூவாலி கிரயம் பெற்ற விவரம் எனக்கு தெரியும். மேற்படி பூவாலிக்கு வாரிசுகள் யார் யார் என்றால் எனது கணவர் வைரக்கன்னு, கருத்தம்மாள், மணிமேகலை,சரோஜா, ரவி, சண்முகராஜ், வசந்தி ஆகியோர். வைரக்கன்னுவின் மூன்றாவது மகன் 1–ம் பிரதிவாதி என்றால் சரிதான்.

2. எனது கணவர் வைரக்கன்னு வாணகிரி ஊராட்சி மன்ற தலைவராக இருந்தார் என்றால் சரிதான். எனது கணவர் வைரக்கன்னு ஊராட்சி மன்ற தலைவராக இருந்த சமயத்தில் நத்தம் நிலவரி திட்டத்தின் கீழ் தாவா சொத்திற்கு பட்டா பெறப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அதன் அடிப்படையில் வைரக்கன்னு தாவா சொத்தை கடந்த 07.08.2018–ம் தேதி 1–ம் பிரதிவாதிக்கு செட்டில் மெண்ட் ஆவணம் எழுதிவைத்தார் என்றால் சரியல்ல. அந்த ஆவணம் செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

3. பூவாலி பெயரில் ஏற்பட்ட ஆவணத்தை மறைத்து பொய்யாக போர்ஜரியாக தாவா சொத்திற்கு ஆவணம் ஏற்படுத்தப்பட்டது என்றால் சரியல்ல. பூவாலி தாவா சொத்தை வாங்கும்போது உள்ள நான்கெல்லைதான் 1–ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த செட்டில்மெண்டில் உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்தில் வாதிக்கும் பங்குரிமை உண்டு என்ற காரணத்தினால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி முடித்துக்கொள்ளப்படுகிறது.**

**மறு விசாரணை இல்லை.**

**(முடிவு நேரம்– 12.53)**